ரும் ஆவேச நாடகங்கள் அரங்கேறுவது வேதனையான ஒன்று.

**கே.ஆர். பிரபு, செஞ்சி.**

✻ உதவி செய்த நடிகர்களையே திரைப்பட தொழிலாளர் தரப்பு எதிர்த்தால், பிறகு எப்படி அவர்கள் தொழிலாளர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு வருவார்கள்? கலைநிகழ்ச்சிகளை நடத்தித் தருவார்கள்? இனியாவது, உதவி பெற்ற பிறகு ஏணியை உதைக்கும் வேலையில் திரைப்பட தொழிலாளர்கள் சங்கம் ஈடுபடாமலிருக்குமா?

**வி.ஆர். நடராஜன், திருமுல்லைவாயல்.**

✻ அரசியல் தகராறுகளைத் தீர்க்கவே முதல்வர் கருணாநிதிக்குப் போதும் போதுமென்றாகி விடுகிறது. இந்நிலையில், சினிமாக்காரர்கள் வேறு சிண்டைப் பிய்த்துக் கொண்டால் அவர் என்னாவது?

**மயில்வீரன், தாமரை நகர்.**

✻ முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரளக் கட்சிகள் ஒரே நிலையை எடுக்கின்றன. தமிழகக் கட்சிகளும் ஆளும் கட்சியின் நிலைப்பாட்டை ஆதரித்து நின்றால், ஆளும் அரசு வலுவாகச் செயல்படும்; தீர்ப்பும் நியாயத்தின் பக்கம் திரும்பும். நியாயம் நம் பக்கம் தானே!

**பி. கீர்த்தி, பாபநாசம்.**

✻ டபிள்யூ. ஆர். வரதராஜனின் தற்கொலை முடிவுக்கு அவரது மனப் போராட்டமே காரணம். மனைவியின் சந்தேகம் ஒரு பக்கம், அவர் நேசித்த கட்சி அவரை பதவியிலிருந்து நீக்கி ஓரங்கட்டியது மறு பக்கம் என எழுந்த மனப் போராட்டமே அவரை இந்த முடிவை எடுக்கத் தூண்டியுள்ளது.

**பி.தேவி, பட்டீஸ்வரம்.**

✻ வைகோவின் மறுமலர்ச்சி கொடிப் பயணம் ம.தி.மு.க. தொண்டர்களை மட்டுமன்றி பொதுமக்களையும் மறுமலர்ச்சியாக ஈர்க்கும் பயணம்தான். தேய்ந்து வருவதாகச் சொல்லப்பட்ட ம.தி.மு.க. இதனால் நிச்சயம் வளரும்.

**நடராஜன், சென்னை.**

✻ பூவுக்குள் பூகம்பம் என்பதுபோல் கரும்பு விலை குறித்து அ.தி.மு.க. எம்.பி.க்கள் பிரதமரிடம் தந்த மனுவில் கடைசியாக இடம் பெற்ற வரிகள், பூகம்பத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆனால், அம்மனு குறித்து பிரதமர் நடவடிக்கை எடுப்பாரா?

**முக்கண்ணன், கோவை.**

✻ தமிழன் எக்ஸ்பிரஸ்

## புத்தகப் பரிசு பெறும் கடிதம்!

முல்லைப் பெரியாறு அணை குறித்த வழக்கின் முதல் வழக்கறிஞரான லஜபதிராயின் கட்டுரை, முல்லைப் பெரியாறு அணை விஷயத்தினை ஆதி முதல் அந்தம் வரை தெளிவாக அலசி ஆராய்ந்திருந்தது. அதுமட்டுமல்லாமல், தென்மாவட்ட மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் சிதறிக் கிடக்கும் பரிதாபத்தினையும், அதன் பலனாக கேரளா குளிர் காய்ந்துவரும் கொடுமைதனையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரைக்கும்படியாகவும் எடுத்துரைத்திருந்தது.

**இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

இதழில் வெளியாகும் சினிமா செய்திகள் ஒவ்வொன்றும் அருமை. கோடம்பாக்கத்தை வலம் வந்தது போன்றதொரு உணர்வை அவை ஏற்படுத்துகின்றன.

**ஜி. மஞ்சரி, கிருஷ்ணகிரி.**

வெளியில் விற்பதைவிட 5000 ரூபாய் விலை அதிகம் உள்ள லேப்-டாப்தான் எல்காட்டுக்குக் கிடைத்ததா? அரசாங்கம் 'டெண்டர் விடுகிறேன்' என்றாலே, இப்படித்தான் பொதுமக்களின் பணத்தை 'எக்ஸ்ட்ராவாக' தண்டம் அழ வேண்டியிருக்கு; மேலிடம் யாராவது காசு பார்த்துவிடுகிறார்கள். இது அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தும். இதைப் பார்த்து பிற அரசுத் துறைகளும் ஊழலில் ஈடுபட வழிவகுக்கும்.

**என். அஸ்வின், சூளைமேடு.**

✻ "முன்பிருந்த அமைச்சர்கள் முக்கியத்துவம் தரவில்லை. நான் தபால்துறை மீது தனி கவனம் செலுத்தி வருகிறேன்" என்கிறார் ராஜா. தகவல் தொழில் நுட்பத் துறையைக் கவனித்ததில் 'அலை அலை'யாகப் பிரச்சினைகள் எழுந்து பாராளுமன்றத்தில்எதிரொலித்தது. இப்போது என்ன நடக்கப் போகிறதோ?

**ரமேஷ், எழும்பூர்.**